13.09.2019

அ.வ.எண்: 62/2015

பெயர்: ஆனந்தநாயுடு

த/பெ. சுப்பாநாயுடு

வா.சா:1

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்து பொது சொத்து என்பதற்கு அரசாங்க ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து கிராமநத்தம் புறம்போக்காகும். கிராமநத்தம் புறம்போக்கானது யாருடையது அனுபவத்தில் உள்ளதோ அது அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அது யாருடைய அனுபவத்திலும் இல்லை. எனது கிராம தலைவர், கிராம நிர்வாக அலுவலர் உள்ளனரா என்றால் ஆம். பொன்பாடி கிராம சபை கூட்டம் மாதம் மாதம் நடைபெறுமா என்றால் ஆம். நான் தாசில்தாரிடமும் கிராம சபை கூட்டத்திலும் பட்டா வேண்டி மனு கொடுத்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்து வருவாய் அலுவலர்கள் தாவா சொத்தை வந்து பார்த்தார்களா என்றால் ஆம். கேள்விக்கு வாதிதரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்து அவரது ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்படுகிறது. வருவாய் அலுவலர்கள் எனது மனுவிற்கு உத்தரவு வழங்கினார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் வருவாய் அலுவலர்கள் எனக்கு எனக்கோ இவ்வழக்கில் நீதிமன்றத்திலோ பதில் வழங்கியுள்ளார்களா என்றால் கிராம நிர்வாக அலுவலர் மட்டும் எனக்கு பதில் வழங்கியுள்ளார். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்பததால் தான் நான் கோரும் பரிகாரத்திற்கு வருவாய் அலுவலர்கள் பிரதிவாதிகள் 5, 6 பதில்உரை போடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாது. எனது பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் உள்ளதால் அதில் உள்ள சங்கதிகல் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. எனக்கு படித்தால் தான் தெரியும். எனவே எனது பிரமாண வாக்குமூலம் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தெரிந்து கொள்ளாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், நான் வழக்கு தான் போட்டுள்ளேன், சாட்சி சொல்லவில்லை. இவ்வழக்கில் தாவா சொத்தில் பொது சொத்து என்று உரிமை விளம்புகை கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் அது பொது சொத்து அல்ல கவர்மென்ட் சொத்து ஆகும். தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை உள்ளது என்ற பரிகாரத்திற்காக இவ்வழக்கு போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். தாவாவில் என்ன என்ன சங்கதி எழுதப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனது வக்கீல் சொல்லி எனக்குதெரியும். தாவாவில் வக்கீல் எனக்கு படித்து சொன்னார் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்திவருகிறேனா என்றால் இல்லை. எனக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளது. விவசாய நிலத்திற்கு வருமான வரி கட்டியுள்ளேனா என்றால் இல்லை. எனது ஊரில் வார்டு மெம்பராக முன்பு இருந்துள்ளேன் பஞ்சாயத்து தலைவராக இருந்தது இல்லை. தாவா சொத்து உள்ள ஊரில் மொத்தம் 5 வார்டுகள் உண்டு. ஏனைய 4 வார்டுகளின் மெம்பர்கள் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரி. நான் வாதியாக 3 வழக்குகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் மீது எத்தனை வழக்குகள் போடப்பட்டுள்ளது என்றால் எதுவும் இல்லை. இவ்வழக்கை தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. பிரதிநிதியாக தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின்

வடக்கு பக்கத்தில் பூனிமாங்காடு தேசிய நெடுஞ்சாலை உள்ளது. கிழக்கு பக்கத்தில் கீதா பாபு விளைநிலம் உள்ளதா என்றால் ஆம். அவ்விளை நிலம் 3 ஏக்கர் இருக்கும். கீதா பாபுவின் தந்தை பிரதிவாதியின் மாமனாரான ஜெயராமன் நாயுடு வீடு மேற்கு பக்கத்தில் சற்று தள்ளி உள்ளது. தாவா சொத்திற்கு மூன்று பக்கங்களிலும் பிரதிவாதியின் நிலங்கள் உள்ளன என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்து மேய்ச்சல்கால் புறம்போக்கு என்றும் எந்த ஆவணத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரி. தாவா சொத்திற்கு நடுவில் கிணறு இருந்தது. அங்கு மோட்டார் பம்பு செட்டு அப்போது இருந்தது இப்போது இல்லை. தாவா சொத்தில் கடைக்கால் போடப்பட்டுள்ளதா என்றால் கடைக்கால் போடப்பட்ட போது நாங்கள் ஆட்சேபணை செய்தோம் இப்போது கடைக்கால் அங்கு உள்ளதா என்றால் ஆம். அந்த கடைக்கால் போட்டு 5 ஆண்டுகள் ஆகியுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதியின் மாமனார் ஜெயராமன்நாயுடுவின் கூரை வீடு வழக்கு சொத்தில் இருந்தா என்ற்ல இல்லை. நரசிம்மநாயுடு ஜெயராமன் நாயுடுவின் சித்தப்பா என்றால் ஆம். நரசிம்மநாயுடுவிற்கு நிரையநிலம் இருந்தனவா என்றால் ஆம். நரசிம்மாநாயுடு அவரது சொத்தை ஜெயராம்நாயுடுவிற்கு எழுதி வைத்துள்ளாரா என்றால் இருக்கலாம். நரசிம்மநாயுடு ஆவண எண்.21/1969 ல் தனது சொத்துகளை ஜெயராமன்நாயுடுவின் பெயரில் எழுதி வைத்தாரா என்றால் எனக்குதெரியாது. இவ்வழக்கில் தாவாசொத்து கிராமநத்தம் அரசாங்கத்திற்கு சொந்தம் இல்லை என்பதால் பிரதிவாதிகள் 5 மற்றும் 6 பதில்உரை போடவில்லை என்றால் சரியல்ல. இப்போது ஒவ்வொரு வீட்டு வாசலிலும் பொது குழாய் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**